புதுவை அரசு

குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை

No.1103/DCS&CA/PDS/B8/2017-18 புதுச்சேரி, தேதி 13/07/2017

04 JUL 2017

செய்திக் குறிப்பு

புதுச்சேரி மோட்டார் எரிபொருள் மற்றும் உயர் வேக டீசல் எண்ணெய் (பராமரிப்பு மற்றும் விநியோக ஒழுங்குபடுத்துதல்) உத்தரவு, 1985- திருத்தம் சம்பந்தமாக.

இதுவரை உயர்வேக டீசல் எண்ணெய் (High Speed Diesel Oil) வாகன உபயோகத்திற்கு நீங்கலாக மற்ற பயன்பாட்டிற்கு (கொள்முதல் மற்றும் சேமிக்க ஜெனரேட்டர் இயக்குதல் மற்ற இதர தேவைகளுக்கு) புதுச்சேரி மோட்டார் எரிபொருள் மற்றும் உயர் வேக டீசல் எண்ணெய் பராமரிப்பு மற்றும் விநியோக ஒழுங்குபடுத்துதல், 1985) உத்தரவின் படி குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறையின் முன் அனுமதி பெற வேண்டும். கடந்த 30 ஆண்டுகளாக புதுச்சேரி மாநிலத்தில் தொழில் துறையின் அபார வளர்ச்சி காரணமாக ஜெனரேட்டர் மற்றும் இதர பயன்பாட்டுக்காக டீசல் உபயோகப்படுத்துவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

எனவே புதுவை அரசு தொழில் துறை வளர்ச்சி மற்றும் எளிதாக தொழில் செய்வோர்க்கு ஏதுவாக டீசல் கொள்முதல் செய்வதில் உள்ள நடைமுறை சிக்கல்களை எளிதாக்கி தற்போதுள்ள முன் அனுமதியின்றி டீசல் கொள்முதல் செய்யும் அளவை 5 லிட்டரிலிருந்து 2500 லிட்டராக ஆக உயர்த்தி உள்ளது. இதற்கான சட்டதிருத்தம் புதுவை குடிமைப்பொருள் வழங்கல் மற்றும் விவகாரங்கள் துறையால் அரசாணையாக வெளியிடப்பட்டு புதுவை அரசிதழில் வெளியிட ஆவண செய்யப்பட்டுள்ளது.

எனவே புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழில் துறை நிறுவனங்கள், ஜெனரேட்டர் மற்றும் இதர சட்டப்பூர்வமான நோக்கத்திற்காக 2500 லிட்டருக்கு மிகாமல் டீசலை இத்துறையின் முன் அனுமதியின்றி கொள்முதல் செய்து சேமித்து பயன்படுத்தலாம்.

P. Priyadarshini

(பி. பிரியதர்ஷினி)
இயக்குனர்